செ.வெ.எண்.14 நாள்: 04.03.2020

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நெல்லை கேன்சர் கேர் சென்டர் சார்பில் இலவச புற்றுநோய் தடுப்பு மற்றும் பரிசோதனை முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து பார்வையிட்டார்.

---

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நெல்லை கேன்சர் கேர் சென்டர் சார்பில் இலவச புற்றுநோய் தடுப்பு மற்றும் பரிசோதனை முகாம் இன்று (04.03.2020) நடைபெற்றது. முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி துவக்கி வைத்தார். இந்த முகாமில் அரசு அலுவலர்களுக்கு ரத்த அழுத்தம், சக்கரை மற்றும் பெண்களுக்கு மார்பக புற்றுநோய் பரிசோதனைகள் செய்யப்பட்டது.

முகாமினை துவக்கி வைத்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணியாற்றும் அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு நெல்லை கேன்சர் கேர் சென்டர் சார்பில் இலவச புற்றுநோய் தடுப்பு மற்றும் பரிசோதனை முகாம் நடத்தப்படுகிறது. இந்த முகாமில் அரசு அலுவலர்களுக்கு ரத்த அழுத்தம், சக்கரை மற்றும் பெண்களுக்கு மார்பக புற்றுநோய் பரிசோதனைகள் செய்யப்படுகிறது. உலகில் அதிக அளவில் புற்றுநோய் பாதிப்பு உள்ளது. மார்பக புற்றுநோய் உலகில் உள்ளதில் நமது நாட்டில் மட்டும் 27 சதவிதம் உள்ளது. இவைகளை முன்னதாக கண்டறிந்தால் முழுமையாக குணப்படுத்த முடியும். இதை பரிசோதனை மற்றும் விழிப்புணர்வாக எடுத்துக்கொள்ள வேண்டும். மேலும், அலுவலர்கள் தினந்தோறும் உடல் மற்றும் மனம் அமைதியாக இருப்பதற்காக யோகா பயிற்சிகள் மேற்கொள்ள வேண்டும். இன்று நடைபெறும் இந்த முகாமில் அரசு அலுவலர்கள் அனைவரும் கலந்துகொண்டு பயன்பெற வேண்டும் என பேசினார்.

நிகழ்ச்சியில் கூடுதல் ஆட்சியர் (வருவாய்) திரு.பா.விஷ்ணு சந்திரன், இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை இணை இயக்குநர் மரு.ஷாம்ளா, மாவட்ட விரிவாக்க அலுவலர் மரு.செந்தில்குமார், நெல்லை கேன்சர் கேர் சென்டர் இயக்குநர் மரு.ராம்குமார், துணை இயக்குநர் குடும்ப நலத்துறை மரு.பொன்இசக்கி மற்றும் மருத்துவர்கள், அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.